செ.வெ.எண்: 33 நாள்: 14.01.2020

**புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொங்கல் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொங்கல் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (14.01.2020) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது.

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை இன்று புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்களுடன் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

தை திங்கள் முதல் நாளான பொங்கல் திருநாளில், தமிழகத்தில் உள்ள பொதுமக்கள் அனைவரும் பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாடும் வகையில் தமிழக அரசு சார்பில் பொது மக்களுக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்கப்பட்டு வருவதுடன் பொங்கல் பரிசு தொகுப்புடன் கூடிய ரூ.1000 ரொக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பொங்கல் திருநாளை நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்களுடன் கொண்டாவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பொங்கல் திருநாளில் அனைவரின் வாழ்வில் நலமும், வளமும் பெருகி, அமைதியும் இன்பமும் நிலைக்கட்டும் என்று பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.அழ.மீனாட்சிசுந்தரம், மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் மரு.ராஜ்மோகன், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் நோயாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**